MASTER NEGATIVE NUMBER

6123.24

வைசியமித்திரன்

புத்தகம் 7, இலக்கம் 34

March 25, 1918

Record no. 1102

Vaiciyamittiran̲
Puttakam 7, ilakkam 34
March 25, 1918

Record no. 1102

சந்தா விபரம்.
வருடம் 1-க்கு ... ... ரூ 4—0—0
மாதம் 6-க்கு ... ... ரூ 2—4—0
சினம், சிங்கப்பூர், நேட்டால், சைகோன் முதலான வெளியூர்களுக்கு வருடம் 1-க்கு (தபால்கூலியுடன்) ரூ 5—0—0

உ
சிவமயம்.
வேலுமயிலுந் துணை

REG. NO. M.—340.

விளம்பர விகிதம்.
பத்தி 1-க்கு மாதம் 1-க்கு ருபாய் 20-0-0. நீண்டகாலம் விளம்பரம் செய்வோர்கள் எழுதிக் குறைந்த விகிதம் தெரிந்து கொள்ளலாம். சில்லரை விளம்பரங்களுக்கு தடவைக்கு வரி 1-க்கு அணு 3.

வைசியமித்திரன்

THE VYSIAMITRAN.

பிரதி சோமவாரமும் பிரசுரிக்கப் பெறும்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருக்குறள்.

புத்தகம் 7. | தேவகோட்டை பிங்கள-ளு பங்குனி-மீ 12உ திங்கட்கிழமை 1918-ளு மார்ச்சு-மீ 25-உ | இலக்கம் 34.

இந்திய வர்த்தமானம்.

டாட்டா பாங்கு.

டாட்டா வைத்லொழில் பாங்கு ஏப்பிரல் மாதம் 2ம்தேதி முதல் வேலை செய்ய ஆரம்பிக்கும்.

ஸர் சங்கரநாயரின் சுற்றுப்பிரயாணம்.

இந்தியா சட்டசபையில் கல்வி மெம்பராகவிருக்கும் ஸர் சங்கரநாயரவர்கள் இம்மாதம் 27ம்தேதி டில்லியிலிருந்து புறப்பட்டு கல்கத்தா, சென்னை, ஒத்தகமண்டு, பம்பாய் முதலானவிடங்களைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு ஏப்பிரல் 13உ சிம்லா போய்ச்சேருவார்.

பத்திரிகை ஆபத்துக்குள்ளாய்விட்டது.

ஐக்கியப்பிரதேசத்தில் ஷிகார்பூர் என்றவிடத்தில் வியாபார விஷயங்களை விளம்பரப்செய்யும்பத்திரிகையொன்றை டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட்டு ரூபா 500 ஜாமீன்கட்டும்படி சொன்னதால், ஜாமீன் கட்டச் சக்தியில்லாமல் நின்றுவிட்டது.

வைத்தியசாலை ஸ்தாபனம்.

நீலகிரியிலுள்ள ஜனங்களின் சௌகரியத்திற்காக ஹாஜிபக்கீர் மகமதுசேட் அவர்கள்காலஞ்சென்றதவதுபுத்திரனின் ஞாபகார்த்தமாக நீலகிரியிலுள்ள ஜனங்களின் சௌகரியத்தைக்கருதி உதகமண்டலத்தில் ஒரு இலவசமான வைத்தியசாலை ஸ்தாபிக்கப்போகிறதாக தீர்மானித்துவிட்டார்கள்.

பம்பாய ஹோம்ரூல் சங்கம்.

இம்மாதம் 16ம்தேதி சனிக்கிழமை ராத்திரி மிஸ்டர் ஜின்னா அவர்கள் தலைமைதாங்கிய அவர்களின் அக்கிராசனத்தில் மிஸ்டர் இக்பால் ஹாராயனகுர்பி, மிஸ்டர் ஸையத்ஹூஸேன் என்ற இருவர்களையும் இங்கிலாந்துக்குப் பிரதிநிதிகளாக அனுப்புவதற்கு ஓர்கூட்டம் கூடியது. பிரிட்டிஷ் பொதுஜனங்களிடம் ஹோம்ரூல் இந்தியாவுக்கு அளிக்கவேண்டுமென்ற உறுதியான வார்த்தையை இவர்கள் சொல்வார்களென்றும் இவர்களிடம் இந்தியப்பொதுஜனங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் அபிமானம் காட்டுவதாயும் பிரசங்கங்கள் பிரசங்கிக்கப்பட்டன.

பம்பாயில் பெட்ரோல் எண்ணெய்ப்பஞ்சம்.

பம்பாயில் வியாபாரம் செய்வதற்கென்றே பர்மாவிலிருந்து பெட்ரோல் எண்ணெய் ஏற்றிவந்த கப்பலொன்று புறப்படும்போது தீப்பட்டு எரிந்துவிட்டபடியால் பம்பாய் மோட்டார்வண்டிக்காரர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிருக்கிறது. ராணுவ அதிகாரிகள் தங்கள்வசமிருக்கிற எண்ணெய்களைக்கொண்டு தற்கால அவசரத்தைச் சிறிது பூர்த்திசெய்துவந்தார்கள். எண்ணெய் விற்போர்கள் எரிந்துபோன கப்பலுக்குப் பதில் கப்பல் பூர்த்திசெய்வதற்கு முடியாமலிருக்கிறது. மார்ச்சு மாத மத்தியத்தில் எண்ணெய்வருமென்று எதிர்பார்த்தும்வரமுடியவில்லை. மறுபடியும் பம்பாய் கேவலமானநிலைமையிலாய்விட்டது. தினம்தோறும் ரயில் மூலமாக சென்னையிலிருந்து வரவழைக்கப்படுகிற ஒரு வண்டி பெட்ரோல் எண்ணெயிலிருந்து தற்கால வேலை நடத்தப்பெற்றுவருகிறது.

கல்கத்தா முனுசிபல் அங்கத்தினர் நியமம்.

மூன்றுவருஷத்துக் கொருமுறை நடைபெறுகின்ற கல்கத்தா முனுசிபல் எலக்ஷனில் இப்போதிருக்கும் ஆக்டின்படி கடைசி எலக்ஷன் மார்ச்சு 20ல் வந்துசேர்ந்தது. மொத்தம் 25 வார்டில் 12வார்டுகளுக்கு விவாதமுண்டு. அதில் ஐரோப்பிய சங்கத்திலிருந்து 6பிரதிநிதிகள் அபேக்ஷகர்களாக நின்றதில் ஒருவர் எதிர்வாதம் செய்யப்படாமலும் மற்றொருவர் விவாதத்தில் ஜயித்தும், மீதி 4பிரதிநிதிகளில் இருவர் பங்காளிகளாலும், ஒருவர் ஐரோப்பியராலும், மற்றொருவர் ஐயூ வகுப்பைச்சேர்ந்த அபேக்ஷகராலும தோற்கடிக்கப்பட்டார்கள், தற்காலமிருந்தவரும் 25வார்டுகளில் 3 ஐரோப்பியர்களும், ஒரு மகமதியரும் 2 ஐயூ வகுப்பாரும், 1மார்வாடியும், பதினெட்டு பங்காளிகளும் பிரதிநிதிகளாக விளங்குகிறார்கள்.

ஹோம்ரூல் பிரதிநிதிகளை இங்கிலாந்துக்கு அனுப்புதல்.

ஸ்ரீ லோகோமான்யதிலக் ஸ்ரீமதி விபின சந்திரபாலர் கெல்கர், கரண்டிகர் முதலான ஹோம்ரூல் மெம்பர்கள் ஏப்ரல்மாதம் 3ம்தேதியிலும்B. சக்கிரவர்த்தி,C.R. தாஸ், புரொபஸர் ஜெ. என். பனர்ஜி முதலான ஹோம்ரூல் மெம்பர்கள் ஏப்பிரல்மாதக்கடைசியில் இந்தியாவைவிட்டுப் புறப்படுவார்கள்.

மில் வேலைக்காரர்கள் வேலைக்குத் திரும்பிவிட்டார்கள்.

ஆமதாபாத் மில் வேலைக்காரர்களுக்கும் முதலாளிகளுக்குமுள்ள விவாதங்கள் தீர்ந்துவிட்டது. வேலைக்காரர்களின் கஷ்ட நஷ்டங்களை தீர்ப்பதற்காக கங்கணம்கட்டிக்கொண்ட மிஸ்டர் காந்தி அனசூயாபாய் இவர்களால் நல்ல நிலைமை வந்தடைந்தது. வேலைக்காரர்களின் விவாதம் திரும்வரை மிஸ்டர் காந்தி சாப்பிடுவதில்லை யென்று சபதம் செய்திருந்தார். 100க்கு 35 சம்பளம் கூட்டினாலொழிய வேலையில் சேருவதில்லை யென்று வேலைக்காரர்கள் சபதம்செய்தும், மில்லின் சொந்தக்காரர்கள் இதற்குஇணங்கவில்லையென்ற பிடிவாதமும் கொண்டிருந்தார்கள். சமாதானத்தின் பிரகாரம் 100க்கு 35 அதிகப்படுத்துவதாகும். முதல்நாளைக்கு 20, 2வதுநாள் 27½ என்று கூட்டியே வந்தார்கள். மூன்றுவதுநாள்முதல் 20முதல் 35வரையுள்ள தொகை 3மாதத்திற்குள்ளாக சரிப்படுத்திவிடுவதாக புரொபஸர் ஆனந்தசங்கர துருவர் என்பவர் தீர்மானித்துவிட்டார். அதுவரை மில் வேலைக்காரர்கள் 27½ விகிதம் பெற்றுக்கொள்ளுவார்கள்.

பம்பாயிலுள்ள கைத்தொழில்கள்.

பம்பாய் புதிதாக கைத்தொழில்களுக்கு டைரக்டர் உத்தியோக ஸ்தானம் இரண்டு வருஷத்திற்கு தற்கால மேற்படுத்தப்பட்டிருப்பதில் மிஸ்டர் P. J. மீட்ட ICS அவர்களை டைரக்டராக நியமிக்க அடியில்வரும் விஷயங்களை பம்பாய்க் கவர்ன்மெண்டார் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாகாணத்தொழில் டைரக்டர்கள் செய்யவேண்டும் வேலைகளைப்பற்றி தொழில் கமிஷனர்களின் ஆலோசனையிருப்பதாகவும் கூடிய சீக்கிரமாக அவர்கள் சிபாரிசு செய்வார்களென்றும். அவர்களுடைய சிபாரிசின்மேல் இந்தியா கவர்ன்மெண்டின் உத்திரவு கிடைக்கும் வரை டைரக்டர் அடியிற்கண்ட வேலைகளை அவர்கள் செய்து முடிக்கவேண்டுமென்றும் உத்திரவிட்டிருக்கிறார்கள். 1. ஸ்தல மாகாணத்திலுள்ள கைத்தொழில் முயற்சிகளுக்கு வேண்டிய உதவியும் புத்திமதியும் புகட்டல். 2. புதிதாயும் சீர்திருத்தமடைந்ததுமான சருவிகளை உபயோகிக்கும்படியான சிபார்சு செய்தல். 3. பண்டசாலைகளும், தொழிற்சாலைகளுமேற்படுத்தி அதில் தொழில்களை செய்துகாண்பிக்கவும் மிகுதியாக சாமான்களைச்செய்து பெருந்த வியாபாரத்துக்குதவும்படி செய்தும், தொழிலில் பழகித், தொழில் நிபுணர்களையும் மானேஜர்களையும்; தொழில்களில் பயிற்றுவித்தல். 4.கடன் சேட்போர்களைப் பரிசோதித்தலும் அதை சம்பந்தமான ஆலோசனைகள் முதலான உதவிகளைச்செய்வதும் இவர்களின் வேலையாகும். தொழில் சம்பந்தப்பட்ட மட்டில் மாகாணத்தின் தொழில்களின் செட்டு நிலைமையைத்தெரிந்துகொள்ள வேணுமென்றும், வியாபாரங்களைச்சேகரித்துத்தெரிந்தும் ஸ்தலத்திலிருக்கும் தொழில்களுக்குதனுடையதுதிக்கியத்துக்குத்தகுந்தபடி மாகாணத்திலுள்ள தொழில்களை விர்த்திசெய்வதிற்கேற்ற வழிகளைக் கண்டுபிடிக்கவும் சமயத்துக்குத்தக்கபடி தொழில் நிபுணர்களையும் தொழில் நூலுக்குரிய உதவிகளையும் அளிக்கப்படுமென்றும், டைரக்டருக்கு உதவியாக கமிட்டி யொன்று ஸ்தாபிக்கப்பட்டு அதில் டைரக்டர் அக்கிராசனபதவியம் வகிப்பாரென்றும், கமிட்டியின் மெம்பர்கள் இனிமேல் வெளியிடப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

தேவகோட்டை வைசியசிவானந்த சபையில் தர்மவித்தியா ஞானோதய சங்கத்துச் சிறுமிகள்செய்த ஓர் சம்பாஷனை.

அலமேலு:—லெட்சுமி! வரவேண்டும். ஏது அதிசயம் பூர்ந்தாற்போலிருக்கிறது. நீங்களெல்லாம் காரியக்காரிகள்.

அலமேலு:—ஏது இப்படியெல்லாம் சொல்லுகிறாய். எனக்கு மாலைவேணுமென்ற பிரியமிருந்தாலும் சாவகாசமிருக்கிறதில்லை. என்னசெய்வது.

சுப்புலெக்ஷ்மி:—நீ என்னசெய்வாய்பெரிய சம்சாரியாய்விட்டாய். குழந்தைகளும் உன்னைப் பக்கத்துக்கொண்டு வதைக்கின்றன. அன்றியும் மாமியார் நாத்தனார் தொந்தரவும் ஓயாமல் குடித்தனவேலைகளுமிருக்கின்றன.

அலமேலு:—அவ்விதமிருந்தால் நீ இப்படிப் பரிகாசஞ்செய்வாயோ? காரியக்காரியாயிருக்கும்படி பெரிய சம்சாரத்தை ஏன் எனக்குக் கடவுள் கொடுக்கவில்லையென்றால் அது நன்மைக்காகத்தான் என்று நினைக்கிறேன். குழந்தைகளைப்பெற்றுவிட்டால்மாத்திரம் எல்லாம் ஆய்விட்டதாகும். குழந்தைகளைச் சீராய் வளர்க்க வேண்டும். தெரிந்திருக்கவேணுமென்றஎண்ணம் உனக்கில்லைபோல் காண்கிறது பன்றியைப்போல் பல குழந்தைகளைப் பெற்றுவிடுவதில் என்ன பிரயோஜனம்?

சுப்புலெக்ஷ்மி:—நீ வாசித்திருக்கிறாயம்மா உன்னைப்போல்பேச எனக்கு வருமோ? குழந்தைகளை நாம் என்ன வளர்க்க வேண்டியிருக்கிறது? சிவபெருமானின் திருவருளால் இவைகள் வளருகின்றன. வேளைக்குவேளை ஆகாரம்கொடுத்தால் சாப்பிட்டுவளருகின்றன. நீ சொல்வது எனக்கு விளங்கவில்லையே.

அலமேலு:—விளங்கவில்லையா? விளங்கும்படி சொல்லுகிறேன் கேள். நீ நாளைக்கு சமயல் முதலிய வீட்டுக்காரியங்களைச்செய்யாமலிரு ஆகாரம் வயற்றில் வந்துவிடுகிறதா பார்ப்போம். உன் புருஷன் சம்பாதிக்கப்போகாமல் இருந்தால் இல்லற தருமம் எவ்வாறு நடைபெறும் பார் சிவபெருமான் காட்டுவாரேயன்றி ஊட்டுவாரா?

சுப்புலெக்ஷ்மி:—நீ வாசித்திருக்கிறபடியால் உன்னிடம் பேச எனக்குத் தெரியவில்லை நீ சொல்லுவதும் எனக்கு விளங்கவில்லை.

அலமேலு:—ஏனம்மா நீயும் வாசிக்கலாகாது. வாசித்திருந்தால் தெய்வபக்தி, உலக நடபடிகளை, ஜீவகாருண்யம், தேசபக்தி அரசாங்க விஷயம், குழந்தைகளைப் பழக்கும் வழி, அறநெறி, வருவாய்க்குத்தக்க செலவு செய்யும் யோசனை, கொழுநன் மாமியார் மாத்தனார் இதர பந்துக்கள் பெரியோர்கள் முதலியவர்களிடம் நடந்து கொள்ளவேண்டிய முறைமை, முதலியவற்றை நீயே அறிந்துகொள்வதன்றியும் அறியவும் விசாலப்பட்டுச் சிவபெருமானிடத்திலும் உண்மை யடியார்களிடத்திலும் அன்பும் அதிகப்பிக்கும். அதனால் இல்லற சாதனமுண்டாகும். சொல்லிக்கொடுத்தால் வார்த்தையும் கட்டிக்கொடுக்கும் ஆகாரமும் எத்தனைகாலமிருக்கும்?

சுப்புலெக்ஷ்மி:—அதென்னமோ நீ சொல்லுவதெல்லாம் எனக்கு விளங்கவில்லை நம்முடைய தாய்மார்களெல்லாம் வாசித்துத்தானிருக்கிறார்களாக்கும். அவர்களெல்லாம் பெரிய குடும்பங்களில் குழந்தைகளுடன் பார்த்தவிடத்திலிருந்து வாழவில்லையாக்கும். அவர்களுக்குக் கிடைத்தாற்போல் நமக்கும் கிடைத்தால் போதாதா?

அலமேலு:—உனக்கும் இன்னும் இந்த பேச வைப்புத்தி கிடைக்கவில்லையே. உன் மந்க்கு நான் என்செய்வது? மாதா, பாட்டி, பூட்டிகளெல்லாம் கற்கவிட்டால் நாமும் கற்கக்கூடாதா? அவர்கள் கற்காததால் தான் இச்சாதிற்கு அதிகாரியாவார் இவர் என்றும் இக்கப் பாரதநாட்டை ஆட்சிபுரியும் அரசர் எவ்விடத்திலிருக்கிறாரென்றும், இந்தியா வென்பது நமது நாடே என்றும் இந்நாடு இன்னவிதமாய் ஆளப்படுகிறதென்றும், இதில் முற்காலத்தில் சகல கலைகளும் பிரகாசிக்க நாடு செழிப்புற்றிருந்து ஜனங்கள் செல்வப் பெருக்கும் நாகரீக முதிர்ச்சியும் அடைந்திருந்தனரென்றும் இப்போது சுயராஜ்ய முழக்கம் எங்ஙனும் பரவியிருத்தலுக்குக் காரணம் இன்னதென்றும் அவர்களுக்குத் தெரிந்ததுவும் தெரியாததல்லவா? தாம் பாட்டி முதலியவர்கள் சற்குச்சொரூபபடி குடித்தனகாரியங்களை ஏதோ ஒரு விதமாய்ப் பார்த்துக்கொண்டு ஒழிந்தநேரத்தை வீண் ஆட்டங்களிலும் கொடுமையிலும் 'வம்புச்சண்டைகள் போவதிலும் ஒப்பாரி சுற்பதிலும் கழித்துவிட்டு எல்லாவற்றிற்கும் 'வழக்கம்' என்று பகன்று இன்னாத கட்டுக்கதைகளைக்கேட்டு நம்பி மயங்குகிறார்கள். முற்காலத்தில் ஸ்திரீகள் கற்றுத்தேர்ந்திருந்தார்களென்பதற்கு இலக்காக அநேகம் மாதர்கள் சொற்சுவை பொருட்சுவை இலக்கணம் அமைந்ததாய்ப் பல நூல்கள் இயற்றியுள்ளார்களென்பதை நீ அறியாயா?

சுப்புலெக்ஷ்மி:—உன்கிருக்கப்பட்ட புத்தியில் நூற்றில் ஒருபங்குகூட எனக்கில்லையே எனக்கு உன்னைப்போல் ஒற்[illegible] தும் சொல்லத்தெரியவில்லை. நீ சொல்[illegible] வதையெல்லாம் கேட்டு எனக்கும் கல்வி கற்கவேண்டுமென்று ஆவலாயிருக்கிறது உன்போல் அறிவைக் கடவுள் எனக்கேன் கொடுக்கவில்லை.

அலமேலு:—ஜெகத்ரக்ஷகன் மனுவியர் யாருக்கும் பாரபக்ஷ்மின்றிச் சமத்துவமாகவே புத்தியை அருளிச்செய்தா[illegible] ஆதனை விருத்திசெய்யும்பொ[illegible] த்தான் கல்வி யவசியம் வேண்டும்[illegible] நான் உனக்கு வற்புறுத்திக் கூறி[illegible]

அலமேலு:—புத்தியை யாவருக்கும் அளவாகக்கடவுள் அளித்திரு[illegible] அதற்குக்கல்வி எப்படி அவசியமா[illegible] கிறது. அதைச்சற்றே அன்புடன் வ[illegible] க்கவேண்டும்.

சுப்புலெக்ஷ்மி:—ஆகாரம் சரீரத்தை எவ்வாறு போஷித்து வளர்க்கின்றதோ அவ்வாறே கல்வியானது மதியை வளர்க்கின்றது. அறிவென்னும் இரத்தினமானது கல்வி என்னும் சாணையில் தீட்டப்பெற்றபின்பே நன்கு பிரகாசிக்க ஆரம்பிக்கின்றது. ஆதலால்தான் மக்களுக்கு செல்வப்பொருளைக்காட்டிலும் கல்விப்பொருளே மிக்க அவசியமாய்த் தேடற்பாலதென்று பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். இனியவது உனக்குக்கற்றல் யாவும் உணரவேண்டுமென்னும் எண்ணம் உதித்திருப்பதையறிய எனக்கு மிக்க ஆனந்தமே. கற்கண்டைத்தின்றவனுக்கு அதன் உருசி தெரியும். அதுபற்றியே சாயுமான சுவாமிகளும்'பெற்றவர்க்கேதெரியும்அந்தப்பிள்ளையின்அருமை' என்றும் "கற்றவர்க்கே கண்ணீர் கம்பலையுண்டாகும்" என்றும் சொல்லியிருக்கிறார். உனக்குப் படிக்கப்படிக்கத்தான் கல்வியின் பெருமை தெரியும்.

அலமேலு:—லெட்சுமி! நீ சொல்லும்போது எனக்கு இப்படியெல்லாம் கல்விபடிப்புச் சித்திக்கிறதில் வருமோ? நான் என்னசெய்[illegible] வேன். முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதுபோ லிருக்கிறதேயன்றி[illegible] வேறில்லை.

சுப்புலெக்ஷ்மி:—நீ ஏன் அவ்வாறு சொல்லு[illegible] கின்றாய்? 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்பதை நீ யறியவில்லையா வங்காளநாட்டில் அநேகர் தாங்கள் ஒரு தொழிலில் இருந்துகொண்டே தம் முயற்சியால் அந்நிய பாஷையைக்கற்று உபசரிக்கும் கன்னம் செய்தார்கள் [illegible] மருக்கின்றன. கற்கவேண்டுமென்று ஆ[illegible] யிருந்தால் கல்வி கைகூடும்.

அலமேலு:—கல்விகற்றப் பெண்கள் உத்[illegible] யோகஞ்செய்ய அல்லது கொண்டுபோய்[illegible] போகிறார்களோ யென்று பரிகாசம்செ[illegible] கிறார்களே நான்செய்வது?

சுப்புலெக்ஷ்மி:—பெண்கள் கொண்டுபோய் வாவது உத்தியோகம் செய்து சம்பாதிப்பதற்காவது செல்லுவதில்லை. பெண்ணாவும் புருஷன் தேடிக்கொண்டுவரும் பொருளைச் செவ்வனே தர்மத்தைச் செய்[illegible] வனே நடத்துவதற்கும் குழந்தைகளைப் பக்குவமாய்ப் பாதுகாத்து அவர்களின் படிப்பைக் கவனிப்பதற்கும் ஸ்திரீகளுக்குக் கல்வி யவசியமல்லவா?

அலமேலு:—லெட்சுமி! நீ சொல்வது எனக்கு மிக்க ஆச்சரியமாயிருக்கிறது. தற்காலத்தில் நமது நாட்டிலுள்ள பெண் பாடசாலைகளில் படித்துவரும் பெண்கள் இல்லற தர்மத்தைச்செய்யாதவர்களாகவும், கணவன் முதல் பெரியோருக்கு அடங்காத கர்விகளாகவும் குழந்தைகளைப் பரிபாலிக்கத் தெரியாதவர்களாகவும் இரட்டைக்கு ஏற்காதவர்களாகவும், சில எண்ணமுடையவர்களாகவும், சில் புராதனமாகிய நமது சமயங்களின் உண்மைகளை [illegible] கொள்ளாமலே அவற்றை விடுத்து [illegible] கியமார்க்கப் பிரவேசம் செய்பவர்களாகவும் ஆவிடுவதாக இப்போது நமது படித்தவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்களே. இவையெல்லாம் உண்மை யானால் நமது பெண்களுக்குக் கல்வியினால் தீங்கேயன்றி நன்மையுண்டாகுமா தன்றோ?

சுப்புலெக்ஷ்மி:—ஏது அலமேலு! இவையெல்லாம் நீ எப்படியறிந்துகொண்டாய் தமயந்தி, சீதை, சாவித்திரி, மீத்[illegible] ரேயி, ஔவையார், காரைக்காலம்மை முதலானவர்கள் கல்விகற்று ஸ்திரீ தர்மத்தை நன்கறிந்திருந்தனர் என்பதை அவர்களின் சரித்திரத்தாலறிகிறோம். நீ நல்லதையும்செய்யும் கெட்டதையும் செய்யும். உபயோகப்படுத்தும் தன்மையைப் பொறுத்திருக்கிறது. அக்கியலத்துள்ள நீர்வார்த்துடன் பாடசாலைகளில் கல்வி பயிலும் சிறுமிகள் நீ கூறிய தீங்[illegible]

இதன் தொடர்ச்சி 5ம்பக்கத்தில் பார்க்க]

உ
சிவமயம்.
வேலுமயிலுந்துணை.

வைசியமித்திரன்.

1918ளு மார்ச்சுமீ 25உ திங்கட்கிழமை.

நாட்டுக்கோட்டை நகர வைசிய மஹாஜன ஸபை.

நாட்டுக்கோட்டை நகர வைசிய மஹாஜன ஸபை 21—3—18 பிற்பகல் [illegible] க்கு வைசியசிவானந்தசபையில் [illegible] தேவகோட்டைதனில், கூடிற்று. [illegible] வகுப்பார்மட்டும் இடம்பெற்றார் [illegible] சுமார் 700 பிரதிநிதிகளிருக்கலாம் [illegible] பிற நகரங்களிலிருந்து வந்தவர் 200பேர்களிருக்கலாம். தேவகோட்டை ஜமீந்தார் ஸ்ரீமான் அள. அரு [illegible] ணாசலம்செட்டியாரவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி ஸ்ரீமான் ராம [illegible] வைரவன்செட்டியாரவர்களால் [illegible] பிரேரபிக்கப்பெற்று அதனை [illegible] பிச. அரு. அருணாசலம்செட்டியாரவர்களால் ஆமோதிக்கப்பெற்றது. [illegible] அக்கிராசனபதி ஆசனத்திலமர்ந்ததும் [illegible] வைசியசிவானந்தசபையாரால் வரவேற்[illegible] பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பெற்றது. பின்னர் அக்கிராசனபதி 'வைசியசிவானந்த சபையாரின் [illegible] தமக்கிணங்கி தம் அக்கிராசனம் வகிப்பதாயும் வந்த ஜனங்களுக்கும் [illegible] நாட்டில் தாங்கமைப்புகழ்ந்து [illegible] நகரத்தார் உறவு முறைகளின் [illegible] சொன்னார்கள். [illegible] உபசாரங்களின் சாராம்சத்தை [illegible] அடியில்குறிப்பிடுகிறோம். தேவகோட்டை ஸ்ரீமான் சித. முருகப்பசெட்டியாரவர்கள் [illegible] என்பதை ஒழித்துக் [illegible] ஒற்றுமைக்குத் ஒற்றுமை [illegible] அது நம் ஸமூகத்திற்கு [illegible] தேதல். ஒற்றுமையாகவிருந்தகால [illegible] சகல விவாதங்களும் ஜாதிக்கல்வி [illegible] மையால் செய்யப்பட்டன. ஒற்[illegible] கெட்டபின் ஸமூகத்தார் அரசாங்க கோர்ட்டுகளில்போய் மரியாதையை [illegible] பணத்தைச்செலவிட்டு சாக்ஷிகளுக்கும் மற்றவர்களுக்கும் லஞ்சம்கொடுத்தும் வக்கீல்களுக்குக்கொடுத்தும்அவர்கள் அடிமைபோல நடந்துகொண்டிருக்கிறார்கள். ஒழுங்கான முறை நீங்கி [illegible] கஷ்டம் நஷ்டம் நீண்டகால [illegible] ஆனவிட்டன. முன்போல ஸமையை ஸ்தாபித்து இனிதாவமுறைப்படி இதாவருப்பாரைப்போல கல்வி தொழில் முதலிய வழியில் விர்த்திபெற முயல வேண்டும் [illegible] குடி மடத்து வியவகாரத்தாலும் [illegible] தக்குடி கோவில் வியவகாரத்தாலும் [illegible] மை கெட்டுவிட்டதை நாம் [illegible] மீண்டும் ஒற்றுமையைக் [illegible] ஸமூக சபையை ஸ்தாபித்து நன்மையைப்பெற , முயலவேண்டியவசியமாகும்.

மகிபாலன்பட்டி ஸ்ரீமான் கதிரேசன் செட்டியாரவர்கள் [illegible] ஸமூக பெருமையும் [illegible] நிலைமையும் ஏன்பதைப்பற்றி [illegible] ப்பாகும் புரிந்தார்கள். நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரத்தையும் சங்க [illegible] சிலப்பதிகாரம் முதலியவைகளையும் ஆராய்ச்சிசெய்து பார்க்கும் [illegible] இப்போது நம் வருப்பார் அநுசரித்துவரும் வழக்கங்களை கவனிக்[illegible] போதும் 1800வருஷங்களுக்குமுன் [illegible] நம்பார் காவேரிப்பூம்பட்டினத்திருந்ததாகத் தெரிகிறது. அந்த [illegible] டணம் கடல்பொங்கி அழியப் [illegible] போது பாண்டிநாட்டிற்கு வந்திருக்கவேண்டும். இந்நாட்டிற்கு வந்ததற்குச் சரியான காரணம் தெரியவில்லை. மத்தியில் நாகரீகமற்ற மூடர்ஜாதியாரின் பழக்கத்தால் குலாசாரம் முதலியவைகள் குறைந்துவிட்டன. ஆனால் ஒழுக்கம் சத்தியம் முறைவுபடாமல் வியவகாரங்களை ஆலயங்களில் தீர்த்துக்கொண்டுவந்திருக்கிறார்கள். அந்தக்கூட்டம்களுக்கெல்லாம் கடவுளே அக்கிராசனுசிபதியாக நினைத்துக்கொண்டு கடவடிக்கைகள் நடத்தப்பட்டுவந்தன.மிற்காலத்தில் செல்வமிகுதியால் ஒழுக்கம், சத்தியம், ஒற்றுமை, சமத்துவம் எல்லாம் கெட்டுவிட்டன மேனுட்டுப் பழக்கங்களையாடப்படுகின்றன, ஆனலதனை முற்றிலும் கையாடாமல் நன்மையான பாகத்தைமட்டும் கைக்கொள்ளல் தரும் தலைவர்கள் நடுநிலைமை தவறவே ஏனையோரும் அதனைப் பின்பற்றிவிட்டார்கள் அதுவே ஒற்றுமைக்குஹானியை உண்டு பண்ணியது. இப்போது ஸமூகசபை கூட நிஜப்பது புதிய சிருஷ்டி என்றே கருதவேண்டும். எவர்கள் முன்னிலையில் ஸபை நடக்கவேண்டுமோ அவர்கள் நல்லவராக அமைந்தது முற்போக்கின் அறிகுறியாகும். எல்லா நகரங்களிலும் பிரதிநிதிகள் வேண்டும். எல்லா ஜனங்களுக்கும் சமூகசபையின் சாதகத்தை போதித்து ஒற்றுமைப்படுத்த முயல வேண்டும். தேவகோட்டை வாசிகளே! இவ்விஷயத்தில் முயற்சிப்பது பெருந்தும். எந்தவிஷயத்திலும் கருமமே கண்ணாயிருந்து செய்தல் சித்திபெறுமென்றும் சொன்னார்கள்.

தேவகோட்டைஸ்ரீமான்கரு.சி.சொர்ணநாதன்செட்டியாரவர்கள்"விவாகச்செலவு" என்பதைப்பற்றி உபந்நியாசித்தார்கள். அதில் செட்டு என்பதிலிருந்து செட்டி என்பது பெறப்பட்டது. அதை உணராமல் செலவு மிகுதியாய் செய்யப்படுகிறது விசேஷகாலத்தில் செய்யப்படும் உணவு வகைகள் உபயோகப்படுத்தக் கூடாதமிகமாக வரம்பு கடந்து செய்யப்பட்டு அவைகள்செல்லும் வழி பரிகாசத்[illegible] இடம் தருவனவாய் இருக்கிறது பெண் கிரயம் ஸமூகஸபைஇல்லாத சமையத்தில் சுமார் 65வருஷத்திற்கு முன் 150பிராங்கைஇருந்தது கடல்கடந்து வர்த்தகம் செய்வதை விசேஷமாகக் கவனியாமல் சென்னை ராஜதானியிலே வர்த்தகம் நடத்திவந்தார்கள். பெண்களெல்லாம் கைத்தொழில் நடத்திவந்திருக்கிறார்கள். அநேகமாய் பண்டமாற்றுதலே செய்யப்பட்டது. சத்தியம், நாணயம், ஒழுக்கம், தர்மம், சகோதரத்துவம், ஒற்றுமை,முதலிய விசேஷ குணங்கள் நிறைந்திருந்தன சாதுவமான சம்பந்தத்தை விரும்பினர்கள். இப்போது தலைவர்கள் தாமமாசாய்நடக்க தலைப்பட்டனர். பஞ்சாயத்துக்குரிய ஸ்தலங்கள் மறைந்தன. சமத்துவம் சகோதரத்துவம் ஒழிந்து அடிமைகளாக பாவிக்கப் படுகிறார்கள்; நன்மை சத்தியம் என்பது கொண்டாடப்படவில்லை. பெண் விற்பவர்கள் 10000விராகன் வரையில் எதிர்பார்க்கத் தலைப்பட்டுவிட்டார்கள். திரவியவந்தர்களும் தங்கள் குமாரர்களுக்கு 8000விராகன்வரை ஸ்திரீதனம் கேட்டு வாங்குகின்றனர்; பெண் விற்பவர்கள் வாங்கும் பணத்தில் அநேகமாய் அந்நியநாட்டுச்சாமான்களிலும் வீண்செலவிலும் தொலைத்துவிடுகின்றனர், விவாஹமுறை பிறழ்ச்சிக்குட்பட்டு விட்டது தங்கள் தங்கள் தகுதிக்கேற்க நடத்துவதில்லை, தங்களிடத்தில் விவாஹ சம்பந்தம் வைத்துக்கொள்ளச் சம்மதிக்காத ஒரு இடத்தை சம்பந்தத்திற்கு விரும்புவது மூடத்தனமாகும். நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரத்தில் நகைகளைப்பற்றியும்சீர் ஸ்ரீதனத்தைப்பற்றியும் வரம்பு கட்டப்பட்டிருக்கின்றனஅதுபோலவே இப்போதும் இசைகுடிமானம் என்று சொல்லப்பெறும் விவாஹப்பதிவு செய்யப்பட்ட சாக்ஷிகளும் கையெழுத்திடுகின்றனர். ஆனலது பொய் என்பதை ருசுப்படுத்தும்படிவரம்பு கடந்து ஸ்திரீதனம் சீர் வரிசைகள் நகை முதலியவைகள் செய்யப்படுகின்றன. ஒரு ஜாதிக்குரிய அடையாளமுள்ள திருமங்கல்யம் இல்லாமல் ஒவ்வொருவர் மனம் போல்செய்து உபயோகப்படுத்தப்படுகின்றனர். கடல்கடந்து வர்த்தகத்திற்குச்சென்றுஇருநவர்கள் ஆணிகளுடன் சென்றுவதே தற்காலத்திற்குப் பொருந்தும். வட்டித்தொழில் மிகுந்திருக்கிறது அதைப்பார்க்கிலும் வியாபாரமே சிறந்தது சமூகம் ஒற்றுமையாய் வாழவதற்கு ஸமூக மஹாசபை வேண்டிய தவசியம்.

ஸ்ரீமான் மு. சின்னையாசெட்டியாரவர்கள் "கல்வி எல்லோருக்கும் அவசியம் அதிலும் செல்வவந்தர்களுக்குமிக்க அவசியம் நம்மினத்தாரில் தகுதியாயுள்ளவர்கள் ஒருவருமிலர். ஆனல் கல்வியில் ஒருபகுதிகூட பெறவில்லை. இருபாலரும் நன்கு கல்வி கற்கவேண்டும். தேச அறிவு பெறவேண்டும். நாணயம் என்னும் பெரிய பாக்கியம் முன் நம்மிடத்திலிருந்துவந்தது. அது இப்போது குறைந்துவருவது விசனிக்கத்தக்கது. பெருஞ்செலவு செய்யும் ஏற்பாடே நம் ஸமூகத்தை பாதித்துவருகிறதுபோதிய கல்வி இல்லாமல் அவசரப்பட்டு வியாபாரத்தில் பிரவேசிப்பது தகுந்த பயனளிக்காது. தேச சஞ்சாரம் அவசியம் வேண்டும். உலக சரித்திரம் மாறுபடப்போகிறது பால்ய விவாகம் பொருந்தா விவாஹம், விற்பனை விவாஹம் வீண் செலவு இவை களைந்தெறிக்கவேண்டும். நம் வகுப்பார் 30மயில் சதுரத்திற்குள் ஸ்திரமாய் வசிப்பதால் ஸமூகசபைகூட்டு வதற்கு மிக சௌகரியமாகும்.

ஸ்ரீமான் கருமுத்து அழகப்பசெட்டியாரவர்கள் தர்மத்தைப்பற்றி உபந்நியாசித்தார்கள். எல்லா ஜீவன்களிடத்திலும் அன்பு இருக்கவேண்டும், கடவுள் எல்லா உயிர்களிடத்திலும்பிரகாசிக்கிறார் பேறறிவாளர் சத்திரம் கோயில் பாடசாலை முதலியதர்ம ஸ்தாபனங்களை ஸ்தாபித்திருக்கின்றார்கள். கோயில்கள் தற்காலத்தின் அவசியத்திற்கும் தேவைக்கு மிகைபடச்செலவிட்டு அமைக்கப்படுகின்றன. சத்திரங்களில் பிராமணரல்லாதவர்களுக்கு இரவில்மட்டும் பிசாசுகளுக்கு எறிவது போல் எறியப்படுகின்றன. பிராமணர்களுக்கு அலங்காரத்துடன் போஜனமளிக்கப்படுகின்றன, அவர்கள் சோம்பேறிகளாய், இதே தொழிலாகக்கொண்டு சத்திரம் இருக்குமிடத்தே திரிந்து உண்டு சீட்டாடி அதிதியாம் செய்து காலத்தைக் கழிக்கின்றார்கள். வேதபாடசாலைகளில் கற்கும் அர்ச்சகர்களுக்கு முன்னோடிகாசமாய் உருப்போடத்தெரிவதைத்தவிர்த்த நன்மை. நிமையை பகுத்தறியும் சாஸ்திரப்படிப்பு கற்பிக்கப்படவில்லை. வேதம் அப்பியசித்தவர்கள் பெரிதும் யாசக ஜீவனமே செய்து வருகின்றனர். வேதபாடசாலைகளில் சாஸ்திரபாடமும் கலந்து கற்பிக்கப்படவேண்டும். பாடசாலைகளில் பரிசைஷியென்பதே கிடையா, செலவு செய்வதற்குத்தகுந்த கவனம்செலுத்தப் படவில்லை. பிராமணர்களுக்கு வேதத்திலபிமானமில்லாமற்போய்விட்டது.பிராமணர்களில் அநேகர் குழந்தைகளை ஆயாக்காரி என்னும்செவிலித்தாயிடம் கொடுக்கிவிடுகிறார்கள். அக்குழந்தைகளுக்கு நாஸ்திகபுத்தியே விர்த்தியாகிவிடுகிறது. அதைப்பின்பற்றி நம்மிலும் சிலர் திரிகின்றனர். இப்பழக்கங்களால் நம் ஸமூகத்திற்கல்லாமல் நம் தேசத்திற்கும் தீங்குண்டாகுமென்பதை உணரவேண்டும். ஸ்மிருதியை நாம் அனுஸரிக்கவேண்டியதல்ல. ஆகமசாஸ்திரத்தின் வழிதான் நடக்கவேண்டும். அதுதான் ஸமூகத்திற்கேற்பட்டது. அதனை யநுசரித்த பழக்கவழக்கங்கள் நம் ஸமூகத்திலிருந்துவருகிறது. தாய் பாஷையும் அரசாங்கபாஷையும் அவசியம் கற்கவேண்டும். அரசாங்கபாஷை வர்த்தகத்திற்குவேண்டியவரை இருந்தால்போதுமானது. விடாமுயற்சியுடன் திரவியம் சம்பாதிக்க முயலவேண்டும். வர்த்தக வகுப்புப் புஸ்தகங்களை தமிழில் மொழிபெயர்த்து வெளியிடவேண்டும். நம் வகுப்பாருக்குத்தனியானபல ஹைஸ்கூல்களிருப்பது மேன்மையாகும். வக்கீல் தொழிலுக்கு முதல் வேண்டியதில்லை. அவர்கள் பெரிதும் நம் வகுப்பாரையே நம்பியிருக்கின்றனர். ஸமூகஸபை மூலமாய் பஞ்சாயத்து கோர்ட்டுகளை மீண்டும் ஸ்தாபித்துக்கொள்ளுவதில் பின்னடையலாகாது அநுபவவருஷங்களுக்குமுன்னல் ஸமூகமகாஸபையார் கற்பு ஒழுக்கம் தவறிய ஸ்திரீகளைப்பிரசித்தமாகத்தீர்ப்புகொடுத்திருக்கிறார்களென்றால் அந்த மஹாஸபையை ஜனத்தலைவர்கள் எவ்வாறு போற்றி வந்திருக்க வேண்டுமென்பது சிந்திக்கற்பாலதாகும். மானம் போய்விட்டால் உயிர் போய்விட்டதாய் நினைந்துவந்தார்கள். நம் வகுப்பாரிடத்தில் சிறந்த குணமொன்றிருக்கிறது. தலைவர்கள் ஒரு காரியத்திற்கு முற்படுவார்களானல் வேணும், வேண்டாமென்று தடை சொல்வதில்லை.

லேவாதேவிகாலாவதிநோதஷம்கிடையாது கன்னிகாதான பலன் விசேஷமான அது காலக்கிரமத்தில் குறைந்து வருகிறதினல் நம்மஸமூகாரி விர்த்திக்கு மிக்கதடைபட்டிருக்கிறது இசைகுடிமானத்தில் சொல்லப்பெறும் வார்க்கியங்களைக் கொண்டே நம் வகுப்பார் காவேரிப்பூம் பட்டினத்திலிருந்திருக்கிறார்களென்பதை ருசுப்படுத்தலாம். இளையாத்தங்குடி கோவில் பட்டனத்தார் வகுப்பில், பட்டினத்தடிகள் உதித்தவர் என்பதை மறக்கக்கூடாது. அவர் அகோர சிவாச்சாரியாரிடத்தில் உபதேசம் பெற்றிருப்பதாக தெரிகிறது. விவாஹகாலத்தில் வரன்-வது பக்கத்தாரால் எழுதப்படும் இசை குடிமானம் என்னும் தஸ்தாவேசு பொய்தஸ்தாவேசு என்பதை யனதில் பதிப்பிக்க வேண்டும் குல தர்மத்திற்கு முரண்படாமல் விவாஹத்தை நடத்த வேண்டும். விரோதத்தை மறந்து விட்டு கடமையை பொருமையுடன் செய்யவேண்டும்.

காரைக்குடி ஸ்ரீமான் எஸ் முருகப்பசெட்டியாரவர்கள்

நம் ஸமூகத்தின் கட்டுப்பாடுகளும் மேன்மையும் நிலைகுலைந்ததற்கு காரணம் ஜனத்தலைவர்களே யாவர். அவர்கள் பொது நோக்கமும் பரோபகார சிந்தையும் நடுநிலைமையும் கைநழுவவிடாமலிருந்தவரை க்ஷேமமாக பிரகாசித்தார்கள். குருபூஜை நோக்கமும் சுயலாபமும் பாரபக்ஷமாய் வழக்குரைக்கும் குணமும் அவர்களிடத்தில் குடிகொள்ளவே ஜனத்தலைவர்களின் குடும்பங்கள் தாழ்ந்த நிலையடைந்துவிட்டன இப்போது விவாஹ விஷயத்திலும் வியவகார விஷயத்திலும் வழைகள் படும் கஷ்டம் சொல்லிச்சமந்து. அவர்கள்படும்துயரத்தால் சிந்தும் கண்ணீர் ஜனத்தலைவர்களை பிடிக்காமலிராது. இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள வக்கீல்களில் நம் வகுப்பார்களின் வியவகாரத்தால் திரவியவந்தர்களாகவிட்டார்கள். ஜாதிய பஞ்சாயத்து நியாய ஸ்தலங்களுக்கு கட்டுப்பாடும் முன்டானால் அவர்கள் இருக்கும் இட மறிய ச்சாத்தியப்படாதென்று நினைக்கிறேன்.

பலவான்குடி ஸ்ரீமான் ராமகுராமசாமி செட்டியாரவர்கள்

முற்காலத்திலுள்ள ஜாதியக் கூட்டத்தின் பெருமையையும் அதனுலுண்டான நன்மையையும் அக்கூட்ட மில்லாமையால் படும் கஷ்ட நஷ்டத்தையும் மீண்டும் ஸமூக ஸபை கூட்டுவதற்கு வைசிய சிவானந்தசபையார் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சியைப் பற்றியும் பேசினதுடன் நபர் ஒன்றுக்கு வருஷம் ஒரு ரூபா கட்டணமாக மஹாஸபைக்குச் செலுத்த வேண்டு மென்றும் சொன்னர்;

தர்ம வித்தியா ஞானோதய சங்கத்தின் பெண்பாடசாலை வைசிய பாலிகைகள்:—V அலமேலு. S லக்ஷ்மிபாள் இவ்விருவர்களால் தற்கால விவாஹம் என்னும் சம்பாஷணை நடத்தப்பட்டது.

தேவகோட்டை ஸ்ரீமான் அரு லெ கா லெ நாராயணன்செட்டியாரவர்கள் எல்லா நன்மைக்கும் ஸமூகமஹாசபை இருந்தாலன்றி பயன்படாது. ஜாதிய சம்பந்தத்தைத் தவிர அரசாங்கத்தாரிடம் பெற வேண்டிய நன்மைகளுக்கும் நமக்கு பாதகமாயுள்ளசட்டங்கள் தோன்றும் சமயத்திலும் பேசவதற்கு ஸமூகஸபை ஸ்தாபிக்கவேண்டிய தவசியமாகும். ஆனல் உலகத்தில் எவ்வகுப்பாரும் நினைக்காதகாலத்தில் நாம் ஸ்தாபித்திருந்து மறையும்படி விட்ட ஸபையை மீண்டும் ஸ்தாபிக்க சருதியிருப்பது தனிர புதிதல்ல, ஒற்றுமையால் சித்தி பெற வேண்டு மென்பதை கவனிக்க வேண்டும்

காரைக்குடி நகரத்தார் ராவ்பஹதூர் ஆனரபிள் சா ராம மு அண்ணாமலை செட்டியாரவர்கள் தேவகோட்டை ராவ்பஹதூர் பி சோமசுந்தரம் செட்டியாரவர்கள் ஸ்ரீமாந் அரு லெ வெ நடேசன்செட்டியாரவர்கள் கொத்தமங்கலம் ஸ்ரீமாந் பி அ காசிநாதன் செட்டியாரவர்கள் ஒக்கூர் ஸ்ரீமாந் கூ கண க வேலாயுதம் செட்டியாரவர்கள் கண்டனூர் ஸ்ரீமாந் கெ அரு சித இராமநாதன் செட்டியாரவர்கள். முதலிய கனவான்களிட மிருந்து ஸமூக மஹா சபை கூடுவதில் தங்களுக்கு மிருந்த ஆவலென்றும் தாங்கள் அதன் நோக்கத்தை அங்கீகரிப்பதாகவும் வந்த தந்திகளும் கடிதங்களும் வாசிக்கப்பட்டன.

அக்கிராசனர் முடிவுரையாகபிரம்ம ஞான ஸபையின் ஸ்தாபகர்களான டாக்டர் ஸர் எஸ் சுப்பிரமணியஐயரவர்களும் மிஸிஸ் அன்னிபெஸன்டும் முதலில் ஆத்மஞானத்தைப் பரவும் நோக்கத்துடன் ஆரம்பித்து இருதியில் கஷ்ட நஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் எவ்வாறு தேச சேவையில்பிரவேசித்திருக்கிறார்களோ அவ்வாறேஸமூகசபையார் ஆரம்பத்தில் சரீர பயிற்சியிலும் பின்னர் மத விஷயத்திலும் கவனம் செலுத்தி வந்தார்கள் இப்பொழுது ஸமூக நன்மைக்கு உழைப்பதைக் கைக் கொண்டிருக்கிறார்கள் அதற்காக நம் வகுப்பார்

நமது தற்காலநிலைமை.

உறையூர் தர்மவித்தியா ஞானோதய சங்கத்தின் பாடசாலைகளின் பரிசளிப்புக் கொண்டாட்டம்

இக்கொண்டாட்டம் முன் குறிப்பிட்டபடி 19௨ காலை எக்ஸிக்யூடிவ் என்ஜினியர் மிஸ்டர் P. V. மாணிக்கநாய்க்கரவர்கள் ... 21-3- ... முதல் பரிசளிப்புக்கொண்டாட்டம் ஸ்ரீ ... ஜமீன்தார் ஸ்ரீமான் அருணாசலம்செட்டியார்கள் முதலிய கனவான்களும் வித்துவான்களும் விஜயஞ்செய்திருந்தார்கள்.

... இவைபோன்ற கல்விச் சாலைகளே நமது நாடெங்கும் பரவி நம் பெண்களுக்கு நற் கல்வி போதித்துவருமாறு இறைவன் அருள்புரிவாராக.

பூர்வகால இந்து அரசாங்க முறை.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை இந்திய ச்சிறுவரின் ஐக்கிய சங்கத்தின் வருஷாந்தரக் கொண்டாட்டத்தில் சென்ற சனிக்கிழமை தினம் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜ் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்களின் அக்கிராசனத்தில் மிஸ்டர் ஸி. பி. ராமசாமி அய்யர் பூர்வகாலத்து ராஜாங்கமுறை என்னும் விஷயத்தைப்பற்றி பேசினார்கள். ...

பசுத்தோல்போர்த்திய புலிகள்.

தற்காலம் நடந்தேறிவரும் சண்டையில் ...

வருஷபூர்த்திக்கொண்டாட்டம்

[Vartakamitran]

(இன்னும் வரும்)

பஞ்சுவிலையை நிதானிக்கும் கமிட்டி.

மார்ச்சுமாதம் 28௳தேதியன்று பம்பாய் கவர்ன்மெண்டு காரியதரிசியவர்களின் கட்டிடத்தில் கவர்ன்மெண்டினால் நியமிக்கப்பட்ட பருத்தி நூல் துணிகளின் விலைகளை நிதானிக்கும் கமிட்டி விலைகளைப்பற்றிய விவாதத்தை விசாரணை செய்யும்:

நயமான அரிசிகள்.

வத்தலக்குண்டு சித்தியங்கோட்டை, சம்பா புழுங்க லரிசி வேண்டியவர்கள் அடியில்கண்ட விலாசத்துக்கு யெழுதினுல் நயமான தாயும் விலை சகாயமாயும் அனுப்பப்படும்.

சுப. சோம. ராமநாதஞ் செட்டி.
திண்டுக்கல்.

அஷ்டபந்தன மருந்து.

சிவாலய விஷ்ணுவாலய கும்பாபிஷேக காலத்தில் அஷ்டபந்தனம் செய்வதற்கு, கும்பாபிஷேகம் நடத்தவதில் கீண்டகாலம் அனுபோகமுள்ள எம்மால் சாஸ்திர விதிப்படி உறுதியாக நிற்கக்கூடியதாய் மருந்து தயாரிக்கப்பட்டிருக்கிறது. யுத்தம் காரணமாக சாமான்விலை கூடியிருப்பதால் மருந்து விலை யதிகப்படுத்தியிருக்கிறது.

2½ சேர் பில்லை 1-க்கு விலை ரூ 3½.

விலாசம்:—

ஊமத்தநாடு
வைத்திநாதக் குருக்களய்யா,
சிதம்பரவிநாயகர் தவாதசி மடம்
சிதம்பனி, தேவகோட்டை.

தமிழ்ப் புத்தகங்கள்.

அமரசிம்ஹன்	1	0	0
ஆத்மநாதன்	0	8	0
கல்பலதா அல்லது வெளிவராத ரகசியம்	0	14	0
நாசிப்பிரியை அல்லது பாண்டிநாட்டுப் பணப்புதையல்	0	12	0
இக்தலீகா	0	8	0
மாதவி அல்லது மாதவனின் மாயக்கொலை	0	6	0
ஸ்ரீமத் கம்பராமாயணம் 2-வது அயோத்தியாகாண்டம்	0	10	0
ஞானமிருதம்	0	10	0
தத்துவஞானபோதினி	0	8	0
சர்ணன்	0	2	0
வீணு	0	4	0
லவிதாங்கி	0	8	0
ஜீவகாருண்யமாலை	0	1	0
உமா	0	8	0
பாதுகா பட்டாபிஷேகம்	0	8	0
மிருச்சகடிகம்	0	4	0
குசலோபாக்கியானம்	0	6	0
சக்ரபுராண வசனச் சுருக்கம்	0	8	0
மீனலோசனி	0	8	0
ஜெயவதி	0	2	0
ஹைகோர்ட்டு தீர்மானங்கள் (முதல் வால்யூம்)	5	0	0
தர்மகர்த்தா (ஆக்டு புஸ்தகம்) முதல்பாகம்	0	10	0
ஜலசாக்ஷி	0	10	0
சந்திரகாசன்	0	8	0
பிரேமகலாபதியம்	0	12	0
உஷாபரிணயம்	0	6	0

மானேஜர்,
"வைசியமித்திரன்" பிராஞ்சு பிரஸ்,
காரைக்குடி.

இனிய தமிழ் நாவல்கள்.

ரத்தினபுரி ரகசியம்	3	4	0
கன்னையின் மரணம்	3	0	0
மாண்டிகிரிஸ்டோ	2	8	0
சுகுணதீரன்	2	4	0
கனகபூஷணம்	2	0	0
தனபாலன்	1	8	0
சமனாக்ஷி	1	8	0
ஜடாவல்லவ	1	8	0
நீலா	1	4	0
தர்மாம்பாள்	1	2	0
விநோதாசமஞ்சரி	1	2	0
வரதசுந்தரம்	1	0	0
அந்தப்புரகாதல்	1	0	0
வசிகரி	1	0	0
குணசுந்தரம்	1	0	0
விஜயாருண்யம்	0	12	0
அமீர்ஸிங்	0	12	0
பிரேமகாந்தன்	0	12	0
லீலா	0	12	0
மங்கைக்கரசி	0	12	0
பத்மலோசனி	0	12	0
கோகிலாம்பாள்	0	12	0
ஆனந்தசுந்த	0	12	0
மங்கைக்கரசி	0	12	0

N. B. மேற்கண்ட புஸ்தகங்களுக்கு ஆர்டர் செய்கிறவர்களுக்கு "அமராவதி" என்னும் புஸ்தகம் இனுமாகயனுப்பப்படும். அல்லது அரையணுஸ்டாம்பு, போஸ்டேஜுக்காக யனுப்பினுல் அமராவதி இனுமாகயனுப்பப்படும்.

எஸ். ஜி. ஐயர் அண்டு கம்பெனி
திருவெல்லிக்கேணி, சென்னை.

இனிமேல்

அஞ்சவேண்டாம்.

துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்ய ஸ்ரீ கிருஷ்ண பகவானைப்போல் நமது லோகப் பிரசித்தமான ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள் சரீரத்தைப்பற்றி அல்லற்படுத்தும் அநேக வியாதிகளை வேரோடு களைந்து பசி தீபனம், மூளைச்சுவலிவு, ரத்தவிர்த்தி, பலவிர்த்தி முதலியவைகளைக் கொடுக்கின்றன. இது ஒன்றே பழைய காலத்திய மருந்து. எல்லா தேசத்தாராலும் புகழப்பட்ட அ[illegible] மருந்து.

32-மாத்திரைகளின் விலை ரூ. 1.

கியாட்லாக் இனுமாய் அனுப்பப்படும்.

☞ வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜி,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
157, பிராட்வே, மதராஸ்.
96, மவுண்ரோட் மதராஸ்,
மதுரை, 45 மேலக்கோபுரவீதி.

நகரத்தார் மானேஜ்மெண்டில் நடப்பது
கட்டட முதலியவைகளுக்கு
வெள்ளைக்கல் வகையரு
விளம்பரம்.

கட்டடங்களுக்கு வேண்டிய பட்டியல் பல திணுசுகள் 16 பட்டை 8 பட்டை காக பத்தக்கால்கள், 4 பட்டைக்கால்கள், ஜோடி ரவுண்ட் கால்கள் கீழ்ச்சல்லி. மேற்சல்லித் தாப்பாய்க்கால்கள், குறிஞ்சிக்கால்கள் முதலிய பலவகைச் சாமான்கள் வெகு நயமாகவும், விலை சரசமாகவும் வேண்டியவர்களுக்குத் தாமதமில்லாமல் அனுப்பியும் சென்ற 9, 10 வருஷங்களாக வேலை நடத்திவருகிறோம். எப்போதும் ஷெ சாமான்கள் தயாராகவே இருக்கின்றன. அநேகர் தொழிலாளிகளிடம் முன்னுடியே பணத்தைக் கொடுத்துவிட்டுச் சமயத்துக்குச் சாமான்கள் வந்துசேராமல் மிக கஷ்ட கஷ்டப்படுகிறார்கள். எங்களிடமோ அப்படித் தாமதம் கிடையாது. ஆர்டர் கொடுத்தால் சாமான்களை அனுப்பிவைப்போம் அதன்மேல் கிரயத்தைப் பெற்றுக்கொள்ளுவோம்.

அள பெரி. பெரியண்ணன்செட்டி,
ராயவரம். புதுக்கோட்டை சமஸ்தானம்

காஞ்சீவரம்

நயமான ஜவுளிகள்! சரசமான விலைகள்!!

ஆர்டர் செய்துபாருங்கள்.

நகரத்தாரின் பெண்பிள்ளைகளுக்குத் தேவையான சேலைகள்.
10முழம் கோத்துவாங்கின பட்டு சேலைகள் ரூபா 15முதல் 20வரை.
12 ,, ,, ,, ,, 18 ,, 25 ,,
நூல் சேலைகள் 10, 12 முழம் ரூபா 5 முதல் 6 வரை.
சர்க்கம்பி வேஷ்டிகள் 60நம்பர் நூலில் நெய்யப்பட்டது.
8 முழம் ஜோடி 1க்கு ரூபா 5—8—0
7 ,, ,, ,, ,, 5—0—0
6 ,, ,, ,, ,, 4—8—0
ஜரனி மேல்வேஷ்டிகள் 6 முழம் ஜோடி 1க்கு ரூபா 3 முதல் ரூபா 4 வரை.
ஆரணி துண்டுகள் 4முழம் 4 கொண்டபடி 1க்கு ,, 4முதல் 5வரை
காட்டுத்துண்டுகள் 4முழம் ,, 1க்கு ரூபா 3½ முதல் 4½ வரை
,, 3முழம் ,, 1க்கு ரூபா 2 ,, 3வரை
இடுப்பில் கட்டும் கச்சாக்கள் 5முழம் சிவப்பு சுத்தமான பட்டில் நெய்யப்பட்டது ரூபா 3முதல் 4வரை.
கியாட்லாக் வேண்டியவர்கள் அரையணு ஸ்டாம்பு அனுப்பகோருகிறோம்.

விட்டல் அண்டு கம்பெனி
காஞ்சீவரம்.

பிரசித்திபெற்றுவிளங்கும் நாராயணன்ஸ் பல்பொடி.

20 வருஷ காலமாய் எங்கும் கியாதி பெற்ற இந்த பல்பொடி, பல்வலி, ஈறு வீங்குதல், பல் கூச்சம், ரத்தம் வருதல், வாய் துர்நாற்றம், இவைகளைப் போக்கி பல்லுக்கு முத்துப்போல ஒளியைக் கொடுக்கும். ஒருதடவை உபயோகித்துப் பார்த்தால் வேறே எந்தப் பொடியையும் உபயோகிக்க மனம் நாடாது. காட்டுக்கோட்டை நகரத்தார்கள் நற்சாக்ஷிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள். சிங்கப்பூர் பம்பாய், பினங்கு, முதலான இடங்களுக்கும் ஏராளமாய் அனுப்பப்படுகிறது.

சகலமான வியாதிகளுக்கும் மருந்துகள் இருக்கின்றன. எழுதினுல் அனுப்பக்கூடும்.

விலையின் விபரம்:—டப்பா 1-க்கு ரூ. 0—4—0 டஜன் 1-க்கு ரூ.2—12—0.

1 குரோஸ் அல்லது 12 டஜன் விலை ரூ 32—0—0. போஸ்டு செலவு பிரத்தியேகம்.

விலாசம்:—

நேடிவ் டாக்டர், S. நாராயண ராவ்.
கோபாலகோத்தன் தெரு, மதுரை.

மானிட கடியாரம்.

மனிதர்களுடைய சரீரமென்னும் கடியாரம் அஜீரணம், மலச்சிக்கல் ஸ்வப்ன ஸ்கலிதம், நரம்புத் தளர்ச்சி, அகாலத்தின் கிழத்தன்மை முதலிய வியாதிகளால் சீர்கெட்டிருந்தால்.

மதன மஞ்சரி மாத்திரை.

உபயோகியுங்கள் இம்மாத்திரைகள் மேற்சொன்ன வியாதிகளைத் தீர்த்து மானிட படியாரத்தைச் சீர்திருத்துகின்றது.

40 மாத்திரைகளடங்கிய டப்பி விலை ரூ 1
எல்லா வியாதிக்கும் மருந்து விவரங்களடங்கிய கிரய ஜாப்தா.
இனுமாய் அனுப்பப்படும்.

ராஜ வைத்திய நாராயணஜீ கேசவஜீ
27 சீனுபஜார், மதருஸ்.

நூதனம்!! வாசனைக்கு ராஜா. நூதனம்!!

ஓட்டோ டில்பஹார்.

(ரிஜிஸ்டர்ட்)

சுகமான வாசனையும், நீடித்திருக்கக் கூடியதும், அதிக செலவில்லாததும் இப் பிரதேசங்களில் அதிகமாய் உபயோகப்படுத்தி ஆனந்த மடைந்திருக்கின்றதும், கீர்த்தி பெற்றிருப்பதுமான ஓட்டோ டில்பஹார்.

இதில் ஸ்பிரிட் அல்லது சாராயம் கலப்பில்லை. ஆனுல் இது ஆயிரம் புஷ்பங்களின் சத்து.

ஓட்டோ டில்பஹாரை உபயோகித்து நீடித்த வாசனையுள்ள இதன் ராஜரீக்கைத் தெரிந்துகொள்ளுங்கள்.

		ரூ.	அ.	ப.	வி.	பி.	சார்ஜ்
விலை:	½ டிராம் பாட்டில்	0	8	0	0	4	0
,,	1 டிராம் பாட்டில்	0	12	0	0	4	0
,,	2 டிராம் பாட்டில்	1	4	0	0	4	0
,,	பெரியது	2	0	0	0	4	0
,,	வாசனை யேற்றப்பட்ட கார்டு 1-க்கு	0	1	0			
,,	ஷை சாம்பிள் பாட்டில் 1-க்கு	0	2	0			

குறிப்பு:—வாங்கும்போது "ஓட்டோ டில்பஹார்" என்னும் பெயரைக் கவனித்துப் பாருங்கள்

தென்னிலாகா ஏஜண்டுகள்:— சம்பத் அண்டு கம்பெனி,
சைனு பஜார்ரோட், தெப்பக்குளம், திருச்சினுப்பள்ளி.
பேடெண்டு மருந்துகள், வாசனை தைலங்கள், செண்டுகள் முதலியவை விற்பவர்கள்.

புத்தக விளம்பரம்.

இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக்கொள்ள அநுகூலமாக ஏற்பட்டிருக்கும் புஸ்தகங்களாவன

அபிநவ ஆங்கிலபோதினி 1-வதுவாலியூம்.

இதில் ஆட் பெயர், ஊர்ப்பெயர், தந்தி சமாச்சாரங்கள், லெட்டர்கள், "மேல்விலாசங்கள் முதலியவைகளை அதி சீக்கிரத்தில் கற்றுக்கொள்ள தமிழ் வியாக்கியானத்துடன் ஏற்பட்டிருக்கும் ஓர் அருமையான நூல். விலை அணு 10.

அபிநவ ஆங்கிலபோதினி 2-வது வாலியூம்.

இங்கிலீஷ் பாஷையை திருத்தமாய்ப் பேசவும், எழுதவும் திறமை ஏற்படும்பொருட்டு இங்கிலீஷ் இலக்கணத்தின் அநுபோக விதிகள் பூராவும் தமிழ் வியாக்கியானத்துடன் எழுதப்பட்டிருக்கின்றன. விலை அணு 10.

தமிழ், இங்கிலீஷ் பாக்கெட் அகராதி.

இதில் தமிழ் வார்த்தைகளுக்குச்சரியான இங்கிலீஷ் வார்த்தைகளும், இங்கிலீஷ் வார்த்தைகளின் உச்சரிப்பை தமிழ் எழுத்துக்களிலும் காட்டியிருக்கிறோம். இதன் விலை அணு 10. வி. பி. சார்ஜ் உள்நாட்டுக்கு புஸ்தகமொன்றுக்கு அணு 2. வெளிநாட்டுக்கு அணு 4. மலேய் ஸ்டேட்டிலுள்ளவர்கள் போஸ்டல் ஆர்டர்வாக்கி அனுப்பவேண்டும்.

V. S. K. சுவாமி அன்ஸன்ஸ்,
புக்செல்லர்ஸ், விளாத்திகுளம்,
Via கோவில்பட்டி. S I R

Printed and Published by S. T. Ramanathan Chettiar at the 'Vysiamitran' Press, Devakota,

END OF ISSUE